செய்தி வெளியீடு எண்—386 நாள் — 14.7.2009

## செய்தி வெளியீடு

## மதுரை மாவட்ட பட்டாசுத் தொழிற்சாலை வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்து

## குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குக் கடிதம்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே வடக்கம்பட்டி கிராமத்தில் பட்டாசுத் தொழிற்சாலையில் அண்மையில் நிகழ்ந்த வெடிவிபத்தில் பலர் உயிரிழந்தனர். இதுகுறித்து குடியரசுத் தலைவர் திருமதி பிரதிபா பாட்டில் அவர்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு 8.7.2009 தேதியிட்டு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், மதுரை மாவட்டத்தில் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் வெடிவிபத்து ஏற்பட்டுப் பலர் உயிரிழந்ததுடன், சிலர் காயமடைந்துள்ளதையும் அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்ததாகத் தெரிவித்துள்ளதுடன், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலையும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய அவர்களுக்குத் தமது நல்வாழ்த்துகளையும் தெரிவிக்குமாறு எழுதியுள்ளார்.

*****

வெளியீடு — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.